செ.வெ.எண் 39 நாள்: 24.03.2020

பெரம்பலூர் மாவட்டம்

**கொரோனா வைரஸ் தடுப்பு பணிகள் மற்றும் 144 தடை உத்தரவு தொடர்பான செய்தியாளர் சந்திப்பு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.வே.சாந்தா இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

**அதன் விவரம் வருமாறு:**

பெரம்பலூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தடுப்பு பணிகள் மற்றும் 144 தடை உத்தரவு தொடர்பான செய்தியாளர் சந்திப்பு இன்று (24.03.2020) மாவட்ட ஆட்சியரகத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி.நிஷா பார்த்திபன் இ.கா.ப. அவர்கள் முன்னிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.வே.சாந்தா இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது.

**இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி பெரம்பலூர் மாவட்ட மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, வருகின்றன. அதனடிப்படையில் பொதுமக்களிடையே கொரோனா வைரஸ் தொடர்பான விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டு, கிருமி நாசினிகள் தெளித்தல், முகக்கவசம் அணிதல் மற்றும் சோப்பு போட்டு கைகளை கழுவுதல் உள்ளிட்ட தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி பெரம்பலூர் மாவட்டத்தில் இன்று மாலை 6.00 மணி முதல் 144 ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப்பட உள்ளது, அதன்படி பெரம்பலூர் மாவட்ட எல்லைகளில் தடுப்புகள் ஏற்படுத்தப்பட்டு, அரசு பணி நிமித்தம் செல்லும் வாகனங்களை தவிர பிற வாகனங்கள் மாவட்டத்திற்குள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டாது.

மேலும் மார்ச் 1-ம் தேதிக்கு பிறகு வெளிநாட்டிலிருந்து பெரம்பலூர் மாவட்டத்திற்கு வருகை புரிந்த நபர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களின் இல்லங்களில் தனிமைப்படுத்தப்பட்டு, மருத்துவர்களால், அவர்களின் உடல்நிலை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும் அவர்களது இல்லங்களில் தனிமைப்படுத்தப்பட்ட வீடு என்ற ஒட்டுவில்லையும் சுகாதாரத்துறையின் மூலமாக ஒட்டப்பட்டுள்ளது. மேலும் கிராமங்களில் மார்ச் 1-க்குப் பிறகு சொந்த ஊருக்கு வருகை புரிந்திருந்தால் அவர்களாகவே தங்களை பற்றிய தகவல்களை சுகாதாரத்துறையினரிடம் பதிவு செய்துகொள்ள வேண்டும். அதன்படி பெரம்பலூர் மாவட்டத்தில் வெளிநாடுகளிலிருந்து வருகை புரிந்த 166 நபர்கள் வெளிமாநிலங்களிலிருந்து வருகை புரிந்த 140 நபர்கள் அவர்களது இல்லங்களில் தனிமைப்படுத்தப்பட்டு, அவர்கள் மருத்துவத்துறையினரின் தொடர் கண்காணிப்பில் இருந்து வருகின்றனர். மேலும் பெரம்பலூர் மாவட்டத்தில் அவசரத் தேவைக்காக கொரோனா வைரஸ் அறிகுறி தென்படும் நபர்களின் சிகிச்சைக்காக பெரம்பலூர் அரசு தலைமை மருத்துவமனை, 4 வட்டார மருத்துவமனைகள் மற்றும் தனலெட்சுமி சீனிவாசன் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மொத்தமாக 533 படுக்கைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலும் தயார் நிலையில் 10 நடமாடும் மருத்துவ வாகனங்களும், 4 தாய்சேய் நல மருத்துவ வாகனங்களும் அவசரகால 108 வாகனங்கள் 13 ம், இப்பணிகளுக்காக தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. இதில் இரண்டு 108 அவசர கால வாகனங்களில் கொரோனா சிகிச்சைக்கென பிரத்யேக வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் கர்ப்பிணி தாய்மார்களை தொடர் சிகிச்சை மற்றும் குழந்தைப்பேறுக்கென அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளுக்கு செல்ல 108 மற்றும் 1077 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு பயன்பெறலாம்.

எனவே பொதுமக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தொடர்பாக அரசு எடுத்து வரும் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கும் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். மேலும் கொரோனா வைரஸ் தடுப்பு பணி என்பது சமூகத்தின் பொறுப்பாகும். எனவே பொதுமக்கள்

அனைவரும் 144 தடை உத்தரவு காலத்தில் அத்தியாவசிய தேவைக்காக மட்டுமே வெளியே வரவேண்டும். எனவே பொதுமக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தொடர்பாக மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மேற்கொள்ளப்படும் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கும் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ராஜராஜன், இணை இயக்குநர் மரு.திருமால், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.கீதாராணி, நகராட்சி ஆணையாளர் திரு.குமரிமன்னன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், பெரம்பலூர் மாவட்டம்.**